## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

P.W.–2

O.S.No.64/2016

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. கந்தசாமி | வயது:70 |
| த/பெ. : திரு. நாச்சிமுத்து | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

2 முதல் 4 வாதிகள் ஆஜர். 1,2,6 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதிகள், 1,2,6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 3 ம் தரப்பினர். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **சா.சா.ஆ X1** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

6 ம் பிரதிவாதி அழைத்து ஆஜர் இல்லை. 6 ம் பிரதிவாதி தரப்பில் முறையீடு இல்லை. 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னுடைய சொந்த ஊர் நான் குடியிருந்து வரும் புதுப்பாளையம் என்றால் ஆமாம். எனக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று மகன்கள். அவர்களுக்கு திருமணம் ஆகி விட்டதா என்றால் முதல் மகனுக்கு திருமணம்

ஆகிவிட்டது. முதல் மகனுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் கடந்த வருடம் கார்த்திகை மாதம் நடந்தது. தேதி தெரியாது என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு சொந்த ஊரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. அதன் சர்வே எண் என்றால் க.ச.எண்.377/2 ஏக்கர் சொத்து தனி பாகமாக உள்ளது. அந்த சொத்து விவசாய பூமியா மானாவாரி பூமி என்றால் மானாவாரி பூமி. பாலாமணியின் சொத்து சர்வே எண் என்ன என்றால் க.ச.எண்.347/1 இல் உள்ளது. சண்முகசுந்தரத்திற்கு எந்த காலையில் எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் கால்நடைகளை க.ச.எண்.347/1 சொத்தில் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். அந்தச் சொத்தை தவிர மற்ற பாகதாரர்கள் சொத்துக்கு நான் சென்றதில்லை என்றால் ஆமாம். எத்தனை கால்நடைகள் என்னிடம் உள்ளது என்றால் ஐந்து மாடுகள் உள்ளது. எத்தனை வருடங்களாக க.ச.எண்.347/1 மாடுகளை மேய்த்து வருகிறேன் என்றால் பத்து வருடங்களாக வைத்து வருகிறேன். என்னுடைய வீட்டிற்கும் க.ச.எண்.347/1 சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் அரை கிலோ மீட்டர். பாலாமணி, தனலட்சுமி ஆகியோர் தற்சமயம் உயிருடன் இல்லை என்றால் ஆமாம். அவர்கள் இருவருடைய இறப்பிற்கு சென்று இருந்தேன். அவர்கள் இருவரும் இறந்த தேதி என்ன என்றால் தெரியாது.

3. சண்முகசுந்தரம் இறப்பிற்குச் சென்று இருந்தீர்களா என்றால் இல்லை. 10, 15 வருடங்களாக சண்முகசுந்தரம் திருப்பூரில் இல்லை. வேறு எங்கோ வசித்து வந்ததாக சொல்கிறார்கள் அது பற்றி தெரியுமா என்றால் 15, 20 வருடங்களாக அவர் திருப்பூரில் இல்லை. சின்னசாமி தான் அவ்வாறு சொல்லி வருகிறார் அது சரியா என்றால் சரி. தாவா சொத்து வழக்கு விபரங்களை பற்றி யார் சொன்னார்கள் என்றால் சின்னசாமி சொன்னார். எப்போது சொன்னார் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு வழக்கு விவரங்கள் நடந்து வருவதைப் பொறுத்துச் சொன்னார். சின்னசாமி வகையறா சொத்துக்களை பாகம் பிரித்துக்

கொண்டுள்ளார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு பாகம் ஏற்பட்ட சமயத்தில் நீங்கள் அங்கு சென்று இருந்தீர்களா என்றால் இல்லை. அதனால் பாகம் பிரித்துக்கொண்ட விவரங்கள் பற்றி எனக்குத் தெரியாது என்றால் சரி.

4. பாகம் பிரித்துக் கொண்டது எனக்கு தெரியும். எப்போது தெரிந்து கொண்டார்கள் என்றால் 2007 இல் பிரித்துக் கொண்டார்கள். பாகம் குறித்துக்கொண்ட தேதி தெரியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை. தனலட்சுமியின் மகள், மகன் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. தனலட்சுமிக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரியுமா என்றால் தெரியாது. கந்தசாமி, முத்துலட்சுமி எப்படி தெரியும் என்றால் அந்த ஊரில் உள்ள நபர்கள் மூலம் தெரியும். எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 20 வருடங்களாக தெரியும். கந்தசாமியின் வாரிசுகள் யார் அவர்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

5. ஆடு, மாடு மேய்ப்பதற்காக க.ச.எண்.347/1 சொத்திற்கு நான் சென்றதில்லை வழக்குக்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் தவறு. அவ்வாறு சென்றிருந்தால் அந்த சொத்தைப் பொறுத்து ஏற்கனவே இரண்டு முறை நீதிமன்றத்தில் இருந்து சொத்துக்களை அளப்பதற்கு வந்த விவரங்கள் எனக்கு தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்ததை நான் சொல்லி உள்ளேன். சின்ன சாமியின் வீடு தாவாசத்தில் இருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் ஏழு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

6. சின்னசாமி, பாலாமணியின் அலைபேசி எண் தெரியுமா என்றால் எண் வைத்துள்ளேன். தற்சமயம் அலைபேசி எண் ஞாபகம் இல்லை. முதல் விசாரணை சங்கதிகளில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் சண்முகசுந்தரம் இறந்த தேதி சின்னசாமி சொல்லி தெரியும் என்றால் தவறு. சண்முகசுந்தரம் இறந்த தேதி என்னவென்றால் 22.04.2011 ம் தேதி இறந்து போனார். 15 வருடமாக சண்முகசுந்தரம் எங்கு உள்ளார் என்று தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன். இறப்பிற்கும் செல்லவில்லை என்று தெரிவித்துள்ளேன். ஆகையால் இறந்த தேதி பற்றி தற்போது வழக்குக்காக சின்னசாமி சொல்லி

கூறுகிறேன் என்றால் சரியில்ல. உண்மையிலேயே சின்னசாமி சொன்னதின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். அதனால் தான் என்னுடைய மகனின் திருமண தேதி என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. இறப்பு தேதியை ஞாபகம் வைத்துக் கொள்ளக்கூடிய ஞாபக சக்தியே எனக்கு இல்லை. சின்னசாமி சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

7. அதனால்தான் தாவா சொத்தில் சர்வே எண் முதல் விசாரணையில் ஒரு மாதிரியும் குறுக்கு விசாரணையில் வேறு மாதிரியும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லில் தான் இதற்கு முன்பு தாக்கல் செய்த வழக்கு விபரங்கள் சின்னசாமிக்கு தெரியும் என்று விவரத்தை சின்னசாமி முதலி விசாரணையிலேயே சொல்லவில்லை. தற்போது வழக்கிற்காக நான் சாட்சியாக உருவாக்கப்பட்டுள்ளேன் என்றால் தவறு. தாவா எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது அளவீடு செய்து கொண்டிருந்தார்கள் அதைப்பற்றி சின்னசாமிக்கு தகவல் கொடுத்தேன். அதைத் தவிர மற்ற முதல் விசாரணை சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரி. தாவா சங்கதிகளை பற்றி எதுவுமே தெரியாமல் சின்னசாமி கேட்டுக் கொண்டதற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.23 15:21:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.